

கிருஷ்ணகிரி ஒன்றியத்தில்

தமிழ்நாடு வாழ்ந்து காட்டுவோம் திட்டப்பணிகள்: கலெக்டர் ஜெயசந்திரபானு நேரில் பார்வையிட்டார்

கிருஷ்ணகிரி, செப். 1–

கிருஷ்ணகிரி ஒன்றியம் பெரியகோட்டப்பள்ளி, தேவசமுத்திரம் மற்றும் காவேரிப்பட்டிணம் ஊராட்சி ஒன்றியம், பையூர் ஊராட்சிகளில் தமிழ்நாடு வாழ்ந்துக்காட்டுவோம் திட்ட பணிகளை கலெக்டர் ஜெயசந்திர பானுரெட்டி நேரில் சென்று பார்வையிட்டார்.

முன்னதாக பெரியகோட்டப்பள்ளி ஊராட்சியில் சுஜதா என்பவருக்கு மரசெக்கு எண்ணெய் உற்பத்தி செய்ய ரூ.2 லட்சத்து 80 ஆயிரம் கடனுதவி வழங்கப்பட்டு எள் எண்ணெய், தேங்காய் எண்ணெய், கடலை எண்ணெய், நல்லெண்ணை உற்பத்தி செய்யும் பணிகளையும், தேவசமுத்திரம் ஊராட்சியில் மகளிர் வாழ்வாதார சேவை மையத்தை பார்வையிட்டு இணை மானிய திட்டத்தின் அசோக்குமார் என்பவருக்கு சென்டரிங் தொழில் மேற்கொள்ள ரூ.3 லட்சத்து 50 ஆயிரம் கடனுதவியை கலெக்டர் வழங்கினார்.

தொடர்ந்து காவேரிப்பட்டிணம் ஊராட்சி ஒன்றியம் பையூர் ஊராட்சியில் சமுதாய திறன் பள்ளியை சேர்ந்த 20 பேருக்கு வனநாற்றங்கால் பயிற்சி வழங்கப்பட்டுள்ளதையும், கொய்யா, தேக்கு, மாதுளை, சில்வர்ஓக், பலா, போன்ற பலவகை செடிகள் உற்பத்தி செய்யும் பணிகளை கலெக்டர் நேரில் பார்வையிட்டார்.

102 ஊராட்சிகளில் திட்டம்

கலெக்டர் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:

தமிழ்நாடு ஊரகபுத்தாக்க திட்டமானது புத்துணர்வு பெற்று பல மேம்பாடுகள் செய்யப்பட்டு, வாழ்ந்து காட்டுவோம் திட்டம் எனபெயர் மாற்றம் செய்து சிறப்பாக செயல்பட்டு வருகிறது.

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் பர்கூர், கிருஷ்ணகிரி மற்றும் காவேரிப்பட்டிணம் ஊராட்சி ஒன்றியங்களில் 102 ஊராட்சிகளில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

2020–2021 ஆம் நிதியாண்டில் தொழில் மேம்பாட்டிற்காக வேளாண் மற்றும் தோட்டக்கலைத்துறையின் மூலம் உருவாக்கப்பட்ட 46 உற்பத்தியாளர் குழுக்களுக்கு ரூ.69,00,000 துவக்க நிதிமானியமாக வழங்கப்பட்டுள்ளது.

மகளிர் திட்டத்தின் மூலம் உருவாக்கப்பட்ட ஒத்த தொழில் குழுக்களை மேம்படுத்தி தொழில் குழுக்களாக மாற்றியமைத்து 6 குழுக்களுக்கு ரூ.9,00,000 துவக்க நிதி மானியமாக வழங்கப்பட்டுள்ளது. மேலும் நபார்டு மூலம் அமைக்கப்பட்ட உற்பத்தியாளர் நிறுவனத்தின் செயல்பாடுகளை மேம்படுத்த ரூ.10,00,000 மானியமாக வழங்கப்பட்டுள்ளது.

2021–2022ஆம் நிதியாண்டில் 3 ஒன்றியங்களிலும் 76 உற்பத்தியாளர் குழுக்கள் மற்றும் 39 தொழில் குழுக்கள் உருவாக்கப்பட்டு துவக்க நிதிமானியமாக ரூ.57,00,000 உற்பத்தியாளர் குழுக்களுக்கும், ரூ.29,25,000 தொழில் குழுக்களுக்கும் நிதி வரப்பெற்று பயனாளிகள் பயன் பெற்றுள்ளனர்.

சமுதாய திறன் பள்ளிகள்

மேலும் இத்திட்டத்தின் மூலமாக 47 சமுதாய பண்ணைப் பள்ளிகள் மற்றும் 20 சமுதாய திறன் பள்ளிகள் அமைக்கப்பட்டு விவசாயிகள் மற்றும் தொழில் முனைவோர்களுக்கு பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

கொரோனா காலத்தில் நலிவடைந்த கிராம தொழில்களை ஊக்குவிக்கும் நோக்கத்துடன் 1864 தனிநபர் தொழில் முனைவோர்களுக்கு ரூ.5,35,50,000 நுண்நிதி கடனாக வழங்கப்பட்டுள்ளது.

மேலும் கொரோனாவால் வேலை வாய்ப்பினை இழந்து புலம் பெயர்ந்த திறன் பெற்ற 233 இளைஞர்களுக்கு துவக்க நிதியாக ரூ.2,32,00,000 கடன் வழங்கப்பட்டுள்ளது.

இதனை தொடர்ந்து 2022 –2023 ஆண்டிற்கான இலக்குகள் நிர்ணயிக்கப்பட்டு 49 உற்பத்தியாளர் குழுக்கள், 24 தொழில் குழுக்கள், 105 சமுதாய பண்ணைப் பள்ளிகள், 30 சமுதாய திறன் பள்ளிகள் மற்றும் 204 இணை மானிய

தொகுப்பு வழங்கவும் இலக்குகள் நிர்ணயிக்கப்பட்டு மூன்று வட்டாரங்களில் இதற்கான பணிகள் துரித முறையில் செயல்படுத்தப்பட்டு வருகிறது என கலெக்டர் ஜெயசந்திர பானுரெட்டி செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

இந்த ஆய்வின் போது மாவட்ட செயல் அலுவலர் எஸ்.தமிழ்மாறன், செயல் அலுவலர்கள் கு.முத்துகுமார் (திறன் மற்றும் வேலைவாய்ப்பு), பெ.ஜெய்குமார் (கணக்கு மற்றும் நிர்வாகம்), வே.த.பிரதீப் குமார் (தொழில் மேம்பாடு), ஜி.சிவலிங்கம் (வணிகநிதி), இளம் வல்லுநர்கள் ஆனந்த், பவித்ரா மற்றும் மகளிர் வாழ்வாதார பணியாளர்கள், அணித்தலைவர்கள், திட்டசெயலர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

மாநில உறுப்பினர் பதவியில் சேர விருப்பமுள்ளவர்கள் விண்ணப்பிக்கலாம்

கிருஷ்ணகிரி, செப். 1–

கிருஷ்ணகிரி மாவட்டத்தை சார்ந்த விருப்பமுள்ளவர்கள், புதிதாக தேர்ந்தெடுக்கப்பட உள்ள மாநில உறுப்பினர் பதவியில் சேர்வதற்கு விண்ணப்பித்து பயனடையுமாறு கலெக்டர் ஜெயசந்திர பானுரெட்டி தெரிவித்துள்ளார்.

சமூகநலன் மற்றும் மகளிர் உரிமைத்துறையின்கீழ் மாநில அளவில் முதியோர்களுக்கான உயர்நிலை ஆலோசனை குழுவில் உள்ள அலுவல்சாரா உறுப்பினர்களின் பதவிகாலம். 3 வருடம் கடந்த நிலையில் கிருஷ்ணகிரி மாவட்டத்தை சார்ந்த விருப்பமுள்ளவர்கள், புதிதாக தேர்ந்தெடுக்கப்பட உள்ள மாநில உறுப்பினர் பதவியில் சேர்வதற்கு 45 வயதிற்கு மேற்பட்ட மற்றும் முதியோர்நலன் மேம்பாட்டு பணிகளில் குறைந்தபட்சம் 3 வருடம் அனுபவம் உள்ள நபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

விருப்பமுள்ளவர்கள் மாவட்ட சமூகநல அலுவலகம், மாவட்ட ஆட்சியரகம், கிருஷ்ணகிரி என்ற முகவரிக்கு உரிய ஆவணங்களுடன் 10ந் தேதிக்குள் நேரில் வந்து விண்ணப்பிக்கலாம் என கலெக்டர் ஜெயசந்திர பானுரெட்டி தெரிவித்துள்ளார்.


SRI RAMAKRISHNA ENGINEERING COLLEGE
Winner
Sri Ramakrishna Engineering College
One Lakh Only
₹ 1,00,000/-

ஸ்மார்ட் இந்தியா ஹேக்கத்தான் போட்டியில் ராமகிருஷ்ணா பொறியியல் கல்லூரி மாணவர்கள் சாதனை

கோவை, செப். 1–

கோவை, துடியலூர் வட்டமலை பாளையயம் ராமகிருஷ்ணா பொறியியல் கல்லூரி மாணவர்கள் சர்வதேச அளவில் நடைபெற்ற ஸ்மார்ட் இந்தியா ஹேக்கத்தான் போட்டியில் சாதனை புரிந்துள்ளனர்.

ஸ்மார்ட் இந்தியா ஹேக்கத்தான் என்பது சமூகம், தொழில்நுட்ப நிறுவனங்கள், அரசாங்கம் ஆகியவற்றின் சில அழுத்தமான பிரச்சனைகளை தீர்க்க மாணவர்களுக்கு ஒரு தளத்தை வழங்குவதற்காக மத்திய கல்வி அமைச்சகத்தின் நாடு தழுவிய முயற்சியாகும்.

ஐதராபாத், ஜெய்ப்பூர், ஒடிசா, சிவகாசி, வாரணாசி மற்றும் கோவை உள்ளிட்ட பல்வேறு இடங்களில் நடைபெற்ற ஹேக்கத்தான் போட்டிக்கு, இந்திய தேசிய கடல் தகவல் சேவை மையம், புவி அறிவியல் அமைச்சகம், மாற்றுத்திறனாளிகளுக்கான, சமூக நீதி மற்றும் அதிகாரமளிக்கும் துறை, தேசிய டிஜிட்டல் கல்வி கட்டிடக்கலை துறை, பள்ளிக் கல்வி மற்றும் எழுத்தறிவுத் துறை, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகார அமைச்சகம் போன்ற துறைகளில் இருந்து பல்வேறு யோசனை அறிக்கைகள் சுமார் 1500 மாணவர் குழுவுக்கு வழங்கப்பட்டன.

ஒரு லட்சம் ரொக்க பரிசு

பல்வேறு சுற்றுகளாக நடைபெற்ற இப்போட்டிக்கு ராமகிருஷ்ணா பொறியியல் கல்லூரி சார்பாக கணிப்பொறியியல், தகவல் தொழில்நுட்பம், எலக்ட்ரானிக்ஸ் அண்ட் கம்யூனிகேஷன், எலக்ட்ரானிக்ஸ் அண்ட் இன்ஸ்ட்ருமென்டேஷன் மற்றும் இயந்திரவியல் துறைகளை சேர்ந்த ஏழு அணிகள் மென்பொருள் பதிப்புக்கும், இரண்டு அணிகள் வன்பொருள் பதிப்புக்கும் தேர்வு செய்யப்பட்டது.

36 மணி நேரம் தொடர்ந்து நடைபெற்ற இறுதிச்சுற்றில் ஐந்து அணிகள் வெற்றி பெற்று ஒவ்வொரு அணியும் தலா ஒரு லட்சம் ரொக்க பரிசு வென்றனர்.

வெற்றி பெற்ற மாணவர்களையும், ஆலோசனை வழங்கிய பேராசிரியர்களையும் எஸ்என்ஆர் சன்ஸ் சாரிடபிள் டிரஸ்ட் நிர்வாக அறங்காவலர் டி.லட்சுமி நாரயண சுவாமி, கல்லூரி முதல்வர் என்.ஆர். அலமேலு, கல்லூரியின் தொழில் துறை மையத்தின் தலைவர் கணேஷ் ஆகியோர் பாராட்டி வாழ்த்து தெரிவித்தனர்.

கொப்பரை கொள்முதலுக்கு செப்.,30 வரை கால நீட்டிப்பு

கோவை, செப். 1–

தென்னை சாகுபடி செய்யும் விவசாயிகள் பயன்பெறும் வகையில் மத்திய அரசின் நாபெட் நிறுவனத்தின் மூலம் விலை ஆதரவு திட்டத்தின் கீழ் ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் வாயிலாக கொள்முதல் செய்யப்பட்டு வருகிறது.

தென்னை சாகுபடி செய்யும் விவசாயிகளின் நலனுக்காக நிர்ணயிக்கப்பட்ட தரம், அளவு கொண்ட அரவைத் தேங்காய் கொப்பரை கிலோ ரூ.105.90க்கும் பந்து தேங்காய் கொப்பரை கிலோ ரூ.110 க்கும் கொள்முதல் செய்யப்படும் என அறிவித்துள்ளது.

கோவை மாவட்டத்தில் பொள்ளாச்சி, நெகமம், செஞ்சேரி, ஆனைமலை மற்றும் கிணத்துக்கடவு ஆகிய 5 ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்களை கொப்பரை கொள்முதல் நிலையங்களாக அரசு அறிவித்தது.

தற்போது, கொப்பரை கொள்முதலை அதிகரிக்க தொண்டாமுத்தூர் மற்றும் அன்னூர் ஆகிய 2 நிறுவனங்களை புதியதாக கூடுதல் கொள்முதல் நிலையங்களாக அரசு அறிவித்துள்ளது.

பிப்ரவரி முதல் ஜூலை வரை செயல்பட்ட கொள்முதல் தற்சமயம் செப்டம்பர் 30 வரை கால அளவு நீட்டிக்கப்பட்டுள்ளது. இது நாள்வரை 6212.50 மெ.டன் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது

இந்தத் திட்டத்தின் மூலம் பயன்பெறும் விவசாயிகள் நிலத்தின் சிட்டா அடங்கல், ஆதார் அட்டை நகல் மற்றும் வங்கிக் கணக்கு ஆகிய விவரங்களுடன் தங்கள் அருகிலுள்ள ஒழுங்குமுறை விற்பனைக்கூட கண்காணிப்பாளரை (பொள்ளாச்சி 7010615376, கிணத்துக்கடவு 9865154644, அன்னூர் 8883453333, தொண்டாமுத்தூர் 9994564540, ஆனைமலை 9976168113, செஞ்சேரி 9751527708, நெகமம் 9894687827) அணுகி பதிவு செய்து கொள்ளலாம். இத்திட்டத்தின் மூலம் கொள்முதல் செய்யப்படும் தேங்காய் கொப்பரைக்கு உரிய தொகை விவசாயிகளின் வங்கிக் கணக்கில்

நேரடியாக வரவு வைக்கப்படும் என கலெக்டர் ஜி.எஸ்.சமீரன் தெரிவித்துள்ளார்.

கிராமப்புற பெண்கள், இளைஞர்களுக்கான 'சஹபாகி' திட்டத்தை விரிவுபடுத்தும் 'பேயர்'

கோவை, செப். 1–

இந்திய விவசாயத்தை மாற்றும் அதே வேளையில் குறுந்தொழில் முனைவோருக்கான வளரும் சூழல் அமைப்பை உருவாக்கிடும் வகையில் பேயர் தனது 'சஹபாகி' திட்டத்தை விரிவுபடுத்துகிறது.

சுகாதாரம் மற்றும் விவசாயம் ஆகிய வாழ்க்கை அறிவியல் துறைகளில் முக்கியத் திறன்களைக் கொண்ட உலகளாவிய நிறுவனமான பேயர், கிராமப்புறப்

பெண்கள் மற்றும் இளைஞர்களுக்கு ஒரு விரிவான விவசாய சூழல் அமைப்பை உருவாக்கும் நோக்கத்துடன் அதன் சஹபாகி திட்டத்தை விரிவுபடுத்துவதாக அறிவித்துள்ளது.

'சஹபாகி' என்பது கிராமப்புற சிறுதொழில் முனைவோர் மேம்பாட்டு மாதிரியாகும், இது விவசாயிகள், பெண்கள் மற்றும் கிராமப்புற இளைஞர்களுக்கு ஆலோசகராகவும், சிறு விவசாயிகளுக்கு சரியான தீர்வுகளை பரிந்துரைக்கவும் உதவுகிறது.

'பேயர் சஹபாகி திட்டம்' 2019 இல் தொடங்கப்பட்டது, இன்று இந்த திட்டத்தில் இந்தியா முழுவதும் 4000க்கும் மேற்பட்ட சஹபாகிகள் உள்ளனர். இந்த திட்டம் தற்போது 24 மாநிலங்களில், 470 க்கும் மேற்பட்ட மாவட்டங்கள் மற்றும் 1980 துணை மாவட்டங்களில் செயல்படுத்தப்படுகிறது.

இந்தியா, வங்கதேசம் மற்றும் இலங்கைக்கான பேயரின் பயிர் அறிவியல் பிரிவின் தேசியத் தலைவர் சைமன்தோர்ஸ்டன் வைபுஷ் இந்தத் திட்டத்தைப் பற்றி பேசுகையில்,

"குறுந்தொழில் முனைவோர் நிலையான மற்றும் பொறுப்பான விவசாயத்தை ஊக்குவிப்பதற்கும் கிராமப்புற உற்பத்தியை ஆதரிக்கவும் பேயர் இந்த சஹபாகிகளுடன் தொடர்ந்து நெருக்கமாக இணைந்து செயல்படும்.

மேலும் அவர்களின் கிராமங்களில் ஒரு நிலையான சூழல் அமைப்பை உருவாக்கவும், சமீபத்திய விவசாய மற்றும் வேளாண் நடைமுறைகளை பின்பற்றவும், பேயர் தயாரிப்புகளின் தொழில்நுட்ப அறிவை கற்று, விவசாயிகளுக்கு தனிப்பயனாக்கப்பட்ட பயிர் மற்றும் தயாரிப்பு ஆலோசனைகளை வழங்குவர்.

கிராமப்புற மக்களுக்கு கூடுதல் விவரங்களை வழங்கவும், சஹபாகி திட்டத்தில் சேர்வதை எளிதாக்கவும் பேயர் 18001204049 என்னும் கட்டணமில்லா எண்ணையும் அமைத்துள்ளது.

சச்சின் டெண்டுல்கர் பயன்படுத்திய முதல் காரை பெற்று தந்த ஸ்பின்னியின் "கோ பார்" விளம்பர பிரசாரம் துவக்கம்

கோவை, செப். 1–

பழைய கார்களை வாங்க, விற்க முன்னணி தளமாக விளங்கும் ஸ்பின்னி நிறுவனம், "கோ பார்" என்ற புதிய பிரசாரத்தை துவக்கி உள்ளது.

இதன் முதலீட்டாளரும் பிராண்ட் தூதுவராக உள்ள சச்சின் டெண்டுல்கர், இதில் பங்கேற்கிறார்.

பெரியதாக கனவு காண்; அதை செயல்படுத்து என்ற தொடராக பிரபல திரைப்பட நட்சத்திரங்களும் இதில் உள்ளனர்.

வெற்றி பெற்றவர்கள் தங்களை மீண்டும் உள்நோக்கி பயணம் செய்து திரும்பி பார்க்கின்றனர். இந்த பயணத்தின் முதல்கட்டமாக முதல் கார் 800 ஐ சச்சின் ஓட்டுவதுதான்.

"சில ஆண்டுகளுக்கு முன்னாள் சச்சின் அவரது முதல் காரை கண்டுபிடித்து மீண்டும் இணைய வேண்டும் என தெரிவித்தார்.

"எனது முதல் கார் 800, தற்போது அது என்னிடம் இல்லை. அந்த காரை மீண்டும் நான் பெற வேண்டும் என விரும்பினேன். என்னை தொடர்பு கொள்ள தயக்கம் வேண்டாம். என்னுடன் தொடர்பில் இருங்கள்," என்றார் சச்சின்.

தற்போது, 800 பேயர் நீலம், மீண்டும் புதுப்பிக்கப்பட்டு ஸ்பின்னியின் ஒருங்கிணைந்த தர மையத்தில் உள்ளது. அதை இந்த திட்ட முதலீட்டாளர் சச்சின் பார்த்து விட்டார். ஸ்பின்னி நிறுவனர் மற்றும் தலைமை செயல் அதிகாரி நிராஜ் சிங் பேசுகையில்,

"நீங்கள் வாங்க நினைக்கும் கார் உங்களுக்கு கிடைத்தால் மகிழ்ச்சி தான். ஸ்பின்னி, அனைத்து வகையிலும் உங்களுக்காக செயல்பட்டு அந்த விருப்பத்தை நிறைவேற்றி தருகிறது. இதில், சச்சின் டெண்டுல்கரும் அடக்கம்," என்றார்.

இந்த பிரசாரத்தில் தனது ஈடுபாடு குறித்து சச்சின் டெண்டுல்கர் பேசுகையில்,

"எனக்கு கார் என்பது ஒரு பயணத்துக்கான தேவை. இரண்டாவது வீடு போன்றது. ஸ்பின்னியின் அணியினர் எனது முதல் காரை மறுபடியும் உருவாக்கியது சிறப்பானது. இந்த அணியினர், முதல் காரை மீண்டும் கொண்டுவர அளவற்ற முயற்சிகளை மேற்கொண்டுள்ளனர். ஸ்பின்னி, காருக்கு பின்னணியில் உள்ள உணர்வுகளை மதிக்கிறது," என்றார்.

இந்த பிரசாரம், டிஜிட்டல் தளத்திலும், டிவி, ரேடியோ, ஓஒஎச் மற்றும் ஓடிடி தளங்களிலும் இருக்கும். ஆசியா 2022 கோப்பை, டிஸ்னி பிளஸ் ஹாட்ஸ்டார் மற்றும் ஸ்டார் ஸ்போர்ட்ஸ் சிலும் இடம் பெறும்.

---

kotak Kotak Mahindra Bank கோடக் மஹிந்திரா பேங்க் லிமிடெட்

சுவாதீன அறிவிப்பு

பதிவு அலுவலகம்: 27BKC, C 27, G – பிளாக், பந்த்ரா குர்லா காம்ப்ளக்ஸ், பந்த்ரா (கி), மும்பை 400 051
கிளை அலுவலகம்: கீழ் தளம், கௌதம் சென்டர் இணைப்பு, அவினாசி சாலை, கோயம்புத்தூர் – 641 018.

கோடக் மஹிந்திரா பேங்க் லிமிடெட்டின் அங்கீகரிக்கப்பட்ட அலுவலர் அவர்கள் 2002ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டத்தின் (54 ஆப் 2002) கீழும் மற்றும் பிரிவு 13(12)ன் கீழ் அளிக்கப்பட்ட அதிகாரத்தின்படியும், 2002ம் வருடத்திய கடனீட்டுச் சொத்து மீதான உரிமை (அமலாக்க) விதிமுறைகளின் 3வது விதிமுறைக்கு ஏற்ப, கீழ்க்குறிப்பிட்டுள்ள கடன்தாரர்களுக்கு அனுப்பிய டிமாண்டு நோட்டீசில் குறிப்பிடப்பட்டுள்ள தொகை, திரும்ப செலுத்தும் நாள் வரையிலான வட்டி, செலவினங்கள் மற்றும் இதர கட்டணங்களை மேற்சொன்ன நோட்டீஸ் கிடைத்த 60 நாட்களுக்குள் திரும்பச் செலுத்துமாறு கேட்டுக் கொண்டிருந்தார். எனினும், மேற்குறிப்பிட்டுள்ள கடன்தாரர்கள் /உடன்கடன்தாரர்கள் பாக்கித் தொகையை திரும்பச் செலுத்த தவறியதால் கடன்தாரர்கள்,உடன்கடன்தாரர்களுக்கு குறிப்பாகவும் மற்றும் பொதுமக்களுக்கு பொதுவாகவும் அறிவிக்கப்படுவது யாதெனில் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியானவர், கீழ்க்குறிப்பிட்டுள்ள சொத்தை மேற்சொன்ன சட்டத்தில் 13(4) பிரிவின் கீழ் கொடுக்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படியும், மேற்சொன்ன விதிமுறைகளின் 8வது விதிகளுக்கு இணங்கவும், கீழ்க்கண்ட தேதியன்று சுவாதீனம் எடுத்துக் கொண்டார். கடன்தாரர்களுக்கு குறிப்பாக, பொதுமக்களுக்கு பொதுவாக எச்சரிக்கப்படுவது யாதெனில், அடையாளம் சுவாதீனம் எடுத்துக் கொண்ட மேற்சொன்ன அசையா சொத்து கோடக் மஹிந்திரா பேங்க் லிமிடெட்டிற்கு பிணையமாக உள்ளது என்பதால், யாரும் மேற்படி சொத்து தொடர்பாக எந்தவித வில்லங்கமும் மற்றும் தொடர்புகளையும் வைத்துக் கொள்ளக் கூடாது என்று இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது. சட்டப் பிரிவு 13–ன் உப பிரிவு 8–ன் கீழ், கால அவகாசம் உள்ளதால் ஈடுபெற்ற ஆஸ்திகளை மீட்டுக் கொள்ள கடன்தாரர்களுக்கு அழைப்பு விடுக்கப்படுகிறது. பிரிவு 13(2)–ன் கீழ் டிமாண்ட் நோட்டீஸ் அனுப்பிய தேதி, நிலுவைத் தொகை, சொத்தின் விவரம், கடன்தாரர்கள் விவரம் மற்றும் செலுத்த வேண்டிய தொகை மற்றும் சுவாதீனம் எடுத்த தேதி ஆகியவை கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

கடன்தாரர், உடன்கடன்தாரர்/ உத்தரவாததாரர் பெயர் மற்றும் முகவரி கடன் கணக்கு எண். கடன் தொகை	அசையா சொத்தின் விவரம்	1. சுவாதீனத் தேதி 2. சுவாதீன வகை 3. டிமாண்ட் நோட்டீஸ் தேதி 4. நிலுவைத் தொகை ரூ.
என். வினோத்குமார், த/பெ. கே. நடராஜன் & வி. மகேஸ்வரி இருவரது வசிப்பிடம்: ஜெயின் கேம்ரியா ஈஸ்ட் அபார்ட்மெண்ட், 4வது தளம், பிளாக் 2, அவினாசி சாலை, பீளமேடு, கோயம்புத்தூர் 641 004 & பெரியநாயகி அம்மன் டிரேடர்ஸ், அதன் பங்குதாரர் என். வினோத் குமார் மற்றும் என். பிரேமா இருவரது வசிப்பிடம்: 724, சின்னிய கவுண்டர் லேன், பழைய தாமு நகர், புலியகுளம், கோயம்புத்தூர் 641 045. கடன் கணக்கு எண். 421CSH13816016 & 421CSH13734380 வழங்கப்பட்ட கடன் தொகை: ரூ.64,05,000/- (ரூபாய் அறுபத்து நான்கு லட்சத்து ஐந்தாயிரம் மட்டும்)	கோயம்புத்தூர் மாவட்டம், கோயம்புத்தூர் தெற்கு தாலுக்கா, சௌரிபாளையம் கிராமத்தில் உள்ள 79973.06 சதுர அடி (33.32 கிரவுண்ட்) விஸ்தீரணம் கொண்ட காலி நிலம் மற்றும் சிறு துண்டுகளும் அதன் பகுதிகளும். எஸ்.எப்.எண்.434/1, இந்த சொத்தானது பீளமேடு சார் பதிவு அலுவலகம் மற்றும் கோயம்புத்தூர் பதிவு மாவட்ட எல்லைக்கு உட்பட்டு உள்ளது. இதில் 490.11 சதுர அடி பிரிவுபடாத பங்கு நிலம் மற்றும் 972 சதுர அடி பில்டப் ஏரியா பிளாட் எண்.எப் மற்றும் 109 சதுர அடி பொதுப் பகுதியையும் உள்ளடக்கி உள்ளது. இந்த பிளாட் 4வது தளம், 2வது பிளாக், கார் பார்க்கிங் எண்.40ஐ உள்ளடக்கி உள்ளது. ஜெயின் கேம்ரியா ஈஸ்ட் அபார்ட்மெண்ட் என்று அழைக்கப்படும் இந்த கட்டிடம், அவினாசி சாலை, சௌரிபாளையம் கிராமம், கோயம்புத்தூர் 641 004ல் உள்ளது. மனையின் எல்லைகள் : வடக்கு : எஸ்எப் எண்.435, தெற்கு : எஸ்எப் எண்.517, கிழக்கு : மீதி உள்ள நிலம் மெசர்ஸ் ராமகிருஷ்ணா இண்டஸ்ட்ரியல் பிரைவேட் லிமிடெட்டிற்கு சொந்தமானது, மேற்கு : எஸ்எப். எண்.433. அடமானதாரர் பெயர் : என். வினோத் குமார், த/பெ. கே. நடராஜன்.	1. 29.08.2022 2. பிசிகல் சுவாதீனம் 2. 03.09.2022 3. 02.09.2019 அன்று வரை செலுத்த வேண்டிய நிலுவைத் தொகை ரூ.81,88,352/- (ரூபாய் எண்பத்தோரு லட்சத்து எண்பத்தெட்டாயிரத்து முன்னூற்று ஐம்பத்திரெண்டு மட்டும்) மற்றும் 03.09.2019முதல் முழுமையாக திரும்ப செலுத்தும் காலம் வரை பொருந்தக்கூடிய வட்டி

தேதி : 01.09.2022
இடம்: கோயம்புத்தூர்

கோடக் மஹிந்திரா பேங்க் லிமிடெட்
அங்கீகரிக்கப்பட்ட அலுவலர்

இதர விவரங்களுக்கு திரு. விஜய் குமார்மேனன் (+91 9940572248) மற்றும் திரு. நிர்மல் ஆர் (+91 9846909995) ஆகியோரை தொடர்பு கொள்ளலாம்

---

kotak Kotak Mahindra Bank கோடக் மஹிந்திரா பேங்க் லிமிடெட்

ஆன்லைன் மூலம் இ–ஏல முறையில் சொத்து விற்பனை

பதிவு அலுவலகம்: 27BKC, C 27, G – பிளாக், பந்த்ரா குர்லா காம்ப்ளக்ஸ், பந்த்ரா (கி), மும்பை, மகாராஷ்டிரா, பின்கோடு – 400 051, கிளை அலுவலகம்: கீழ் தளம், கௌதம் சென்டர் இணைப்பு, அவினாசி சாலை, கோயம்புத்தூர் – 641 018.

அசையா சொத்துக்கள் விற்பனைக்கான விற்பனை அறிவிப்பு

கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்க சட்டம் 2002 மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை (அமலாக்கம்) விதி 2002 விதி 8(5) மற்றும் விதி 8(6)–ன்கீழ் அசையா சொத்துக்களை விற்பனை செய்ய இ–ஏல விற்பனை அறிவிப்பு

பஜாஜ் பைனான்ஸ் லிமிடெட் உடன் 19.02.2020 அன்று செய்து கொண்ட ஒப்பந்தத்தின்படி கோடக் மஹிந்திரா பேங்க் லிமிடெட்டிற்கு (KMBL) கடனை ஒதுக்கியுள்ளது. ஈடுபெற்ற கடன் அளித்தவர்களிடம் அடமானம் வைக்கப்பட்டுள்ள கீழே விவரிக்கப்பட்டுள்ள அசையா சொத்துக்கள் கோடக் மஹிந்திரா பேங்க் லிமிடெட்டின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியால் சுவாதீனம் செய்யப்பட்டது என்று பொதுமக்களுக்கு பொதுவாகவும் மற்றும் கடன்தாரர்(கள்) மற்றும் உத்தரவாததாரர்(கள்)க்கு குறிப்பாகவும் இந்த அறிவிப்பு மூலம் தெரிவிக்கப்படுகிறது. ஈடுபெற்ற கடன்தாரரான கோடக் மஹிந்திரா பேங்க் லிமிடெட்டிற்கு **திரு. என். ராமராஜ், திருமதி. ஆர். புவனேஸ்வரி மற்றும் திரு. ராமராஜ் என் (உரிமையாளர், கோரல்லைன் இம்பெக்ஸ்)** ஆகியோர் கடன் கணக்கு எண் 4210HL23746314–ன் கீழ். 30.08.2022 அன்று வரை செலுத்த வேண்டிய பாக்கித் தொகை ரூ.1,41,14,975.16/– (ரூபாய் ஒரு கோடியே நாற்பத்தோரு லட்சத்து பதினான்காயிரத்து தொள்ளாயிரத்து எழுபத்தைந்து மற்றும் பதினாறு பைசா மட்டும்) மற்றும் திரும்ப செலுத்தும் நாள் வரையில் பொருந்தக்கூடிய ஒப்பந்த வட்டி ஆகியவற்றை திரும்ப பெறுவதற்காக ஈடுபெற்ற கடன் அளித்தவர்களிடம் உங்களால் அடமானம் வைக்கப்பட்டுள்ள கீழே விவரிக்கப்பட்டுள்ள அசையா சொத்துக்கள் அவை ''எங்கு எப்படி உள்ளதோ அப்படியே'' என்ற அடிப்படையில் 11.10.2022 அன்று பகல் 12.00 மணி முதல் 1.00 மணி வரை 5 நிமிட வரம்பற்ற நீட்டிப்பில் விற்பனை செய்யப்படும். **குறைந்தபட்ச விலை: ரூ.1,00,00,000/– (ரூபாய் ஒரு கோடி மட்டும்)** மற்றும் முன்வைப்புத் தொகை ரூ.10,00,000/– (ரூபாய் பத்து லட்சம் மட்டும்). கேஒய்சி உடன் முன்வைப்புத் தொகையை சமர்ப்பிக்க வேண்டிய கடைசி நாள் 10.10.2022 அன்று மாலை 6.00 மணி (இந்திய நேரப்படி) வரை. **இந்த விற்பனை நிலுவையில் உள்ள ரூ.2500000/– (ரூபாய் இருபத்தைந்து லட்சம் மட்டும்) விற்பனை விலைக்கு அதிகமாகவும், மெசர்ஸ் டிரைஸ்கொயர் புராபர்டீஸ் பிரைவேட் லிமிடெட்டிற்கு வருங்கால ஏலதாரர் மூலமாகவும் செலுத்த வேண்டும். விவரிக்கப்பட்டுள்ள அசையா சொத்து தொடர்பாக ஏதேனும் வில்லங்கம் இருப்பின் அது குறித்து தயவு செய்து தெரிவிக்கவும்.**

ஈடுபெற்ற ஆஸ்திகளின் முகவரி : பிளாட் எண் 3B, 3வது தளம், டிரைஸ்கொயர் கமல், ராமசாமி தெரு, கே கேபுதூர், சாய்பாபா காலனி கோயம்புத்தூர் 641038.

மேலும் விரிவாக கீழே விவரிக்கப்பட்டுள்ளது:

அட்டவணை ஏ: கோயமுத்தூர் பதிவு மாவட்டம் காந்திபுரம் துணை பதிவு மாவட்டம்,கோயமுத்தூர் தாலுக்கா, சங்கனூர் கிராமம், எஸ்.எப். எண். 299/1. பரப்பு 4.53. முந்தைய எஸ்.எப். எண். 298 பரப்பு 4.77, எஸ்.எப். எண். 299 பரப்பு 4.29. மொத்த பரப்பு 9.06. இதில் மேற்கு பக்கம் பரப்பு 4.53, இதில் வடக்கு மற்றும் கிழக்கு பக்கம் பரப்பு 6693 சதுர அடி (வருவாய் பதிவேடு டிஎஸ்எல்ஆர்–ன்படி 6821 சதுர அடி). கீழ்ககண்ட எல்லைகள் மற்றும் அளவுகள் கொண்டது. வடக்கு: மனை எண். 19 (டி.எஸ். எண். 146) தெற்கு: மனை எண். 21 (டி.எஸ். எண். 151 மற்றும் 152) கிழக்கு: அழகப்பா கவுண்டர் சொத்து டி.எஸ். எண். 148 மற்றும் 162. மேற்கு: 30 அடி வடக்கு–தெற்கு ராமசாமி தெரு (டி.எஸ். எண். 150). மேற்கண்டவற்றில் கிழக்கிலிருந்து மேற்காக வடக்கு: 134 அடி, கிழக்கிலிருந்து மேற்காக தெற்கு: 132 அடி 6 இஞ்ச். வடக்கிலிருந்து தெற்காக கிழக்கு: 50 அடி வடக்கிலிருந்து தெற்காக மேற்கு 50அடி. பரப்பு 6693 சதுர அடி அல்லது 15 (பதினைந்து) சென்ட்ஸ் மற்றும் 159 சதுர அடி அல்லது 621.79 சதுர மீட்டர் வீட்டு மனை மற்றும் அனைத்து உரிமைகள் அதனுடன் இணைக்கப்பட்டது. மேற்சொன்ன சொத்து தற்போது டி.எஸ். எண். 149ல் உள்ளது. வார்டு எண். 17 மற்றும் பிளாக் எண். 17. இந்த சொத்து ராமசாமி தெரு–கே.கே. புதூர், கோயமுத்தூர் மாநகராட்சி எல்லையில் அமைந்துள்ளது.

அட்டவணை பி– மேற்குறிப்பிடப்பட்டுள்ள அட்டவணை ஏ சொத்தில் 50%. ஐ.இ. 3346.5 சதுர அடி. பரப்பு 832 சதுர அடி. பிரிவுபடாத பங்கு நிலம். **அட்டவணை சி –** ப்ளாட் எண். 3பி, விஸ்தீரணம் 1990 சதுர அடி. மூன்றாவது தளம், ட்ரைஸ்கொயர் கமல் கட்டிடம். மேற்சொன்ன அட்டவணை ஏ–யில் உள்ள சொத்து.

சட்டப் பிரிவு 13–ன் உப பிரிவு 8–ன் கீழ், கால அவகாசம் உள்ளதால் ஈடுபெற்ற ஆஸ்திகளை மீட்டுக் கொள்ள கடன்தாரர்களுக்கு அழைப்பு விடுக்கப்படுகிறது. எந்தவொரு காரணத்திற்காகவும் இங்கு திட்டமிடப்பட்ட ஏலம் தோல்வியுற்றால், ஈடுபெற்ற கடன் வழங்கியவர், பாதுகாப்பு நலன் கருதி தனியார் ஒப்பந்தத்தின் மூலம் விற்பனை செய்யலாம் என்று பொதுமக்களுக்கு பொதுவாகவும் கடன்தாரர்களுக்கு குறிப்பாகவும் இதன்மூலம் தெரிவிக்கப்படுகிறது. விற்பனை செய்யப்பட உள்ள சொத்துக்கள் குறித்து ஏதேனும் சந்தேகங்கள்/தேவைகள் இருப்பின் அது குறித்து ஏலதாரர்கள் **திரு. விஷால் ஆதிசேஷன் (+91 9941016600), திரு. ராஜேந்தர் தாஹியா (+91 8448264515), திரு. விஜய் குமார் மேனன் (+91 9940572248), திரு. நிர்மல் ஆர். (+91 9846909995)** ஆகியோரை தொடர்பு கொள்ளலாம். விற்பனைக்கான விரிவான விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு கோடக் மஹந்திரா பேங்க் லிமிடெட் இணையதளம் www.kotak.comல் அளிக்கப்பட்டுள்ள லிங் http://www.kotak.com/en/bank–auctions.html and/or on https://bankauctions.in–ல் பார்வையிடலாம்.

இடம் : கோயம்புத்தூர்
தேதி : 01–09–2022

அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி
கோடக் மஹிந்திரா பேங்க் லிமிடெட்

சம்பந்தம் ஸ்பின்னிங் மில்ஸ் லிமிடெட்

Corporate Identity Number (CIN): L17111TZ1973PLC000675 ;
GST No : 33AAECS3342J1ZH
பதிவு அலுவலகம்: தபால் பெட்டி எண். 1,காமராஜ் நகர் காலனி, சேலம் 636 014
Tel: 0427 2240790 | Email: corporate@sambandam.com; cs@sambandam.com
Website: www.sambandam.com

கம்பெனியின் 48வது வருடாந்திர பொதுக் கூட்டம், புத்தகம் மூடல் மற்றும் மின்னணு முகவரியை பதிவு/மாற்றம் செய்யும் வசதி குறித்த அறிவிப்பு

கம்பெனிகள் சட்டம் 2013ன் பொருந்தக்கூடிய விதிகள், 8 ஏப்ரல், 2020 தேதியிட்ட பொது சுற்றறிக்கை எண்.14/2020, 13 ஏப்ரல், 2020 தேதியிட்ட 17/2020, 5 மே, 2020 தேதியிட்ட 20/2020 மற்றும் 13 ஜனவரி 2021 தேதியிட்ட 02/2021 ஆகியவற்றுக்கு இணங்க, கம்பெனியின் 48வது வருடாந்திர பொதுக் கூட்டம் (AGM) சனிக்கிழமை, 24 செப்டம்பர், 2022 அன்று காலை 11.30 மணிக்கு (இந்திய நேரப்படி) இரண்டு வழிகளில் காணொலி காட்சி (VC)/இதர ஆடியோ காட்சிகள் முறை (OAVM) மூலம் நடைபெறும் என்று இதன்மூலம் அறிவிக்கப்படுகிறது.

மின்னஞ்சல் முகவரியைப் புதுப்பிப்பது தொடர்பாக 26.08.2022 அன்று வெளியிடப்பட்ட எங்கள் முந்தைய அறிவிப்பு விளம்பரத்தின் தொடர்ச்சியாக, கம்பெனிகள் சட்டம் 2013, பிரிவு 91ன் கீழ், கம்பெனியின் உறுப்பினர்கள் பதிவேடு மற்றும் பங்கு மாற்று புத்தகங்கள் 18.09.2022 முதல் 24.09.2022 வரை (இரண்டு நாட்களும் சேர்த்து) மூடப்பட்டிருக்கும். 48வது வருடாந்திர பொதுக்கூட்டம் கூட்டுவது பற்றிய அறிவிப்பு மற்றும் வருடாந்திர அறிக்கை ஆகியவை அந்தந்த பங்குதாரர்களின் பதிவு செய்யப்பட்ட மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பப்பட்டுள்ளது. மேலும் கம்பெனியின் வலைத்தளம் www.sambandam.com மற்றும் கம்பெனியின் சமபங்குகள் பட்டியலிடப்படும் பிஎஸ்இ எக்ஸ்சேஞ்ச் ஆகியவற்றில் கிடைக்கின்றன.

கம்பெனியின் பங்குகளை காகித வடிவத்தில் வைத்திருக்கும் அல்லது கம்பெனியில் தங்கள் மின்னஞ்சல் முகவரியை பதிவு செய்யாத உறுப்பினர்கள் investor@cameoindia.comக்கு மின்னஞ்சல் அனுப்புவதன் மூலம் கம்பெனியில் அவற்றை பதிவு செய்யலாம்.

காகித வடிவத்தில் பங்குகளை வைத்திருக்கும் அல்லது கம்பெனியில் தங்கள் மின்னஞ்சல் முகவரியை பதிவு செய்யாத உறுப்பினர்கள் வாக்குப்பதிவு காலத்தில் தொலைதூர மின்னணு வாக்களிப்பு அல்லது நேஷனல் செக்யூரிட்டி டெபாசிட்டரி சர்வீசஸ் லிமிடெட் (என்எஸ்டிஎல்) வழங்கும் மின்னணு வாக்குப்பதிவு தளம் மூலம் பின்வரும் நடைமுறையின்படி வாக்களிக்கலாம்.

1. காகித வடிவில் பங்குகளை வைத்திருந்தால், தயவுசெய்து போலியோ எண், பங்குதாரர்களின் பெயர், பங்குச் சான்றிதழின் ஸ்கேன் செய்யப்பட்ட நகல் (முன் மற்றும் பின் பக்கம்), பான் (பான் கார்டின் சுய சான்றளிக்கப்பட்ட ஸ்கேன் செய்யப்பட்ட நகல்), ஆதார் (ஆதார் அட்டையின் சுய சான்றளிக்கப்பட்ட ஸ்கேன் செய்யப்பட்ட நகல்) ஆகியவற்றை investor@cameoindia.com–க்கு மின்னஞ்சல் மூலம் அனுப்பலாம்.
2. பங்குகளை டிமேட் முறையில் வைத்திருந்தால், தயவுசெய்து DPID–CLID அல்லது 16 இலக்க பயனாளர் ஐடி, பெயர், வாடிக்கையாளர் மாஸ்டர் அல்லது ஒருங்கிணைந்த கணக்கு அறிக்கையின் நகல், பான் (பான் கார்டின் சுய சான்றளிக்கப்பட்ட ஸ்கேன் செய்யப்பட்ட நகல்), ஆதார் (ஆதார் அட்டையின் சுய சான்றளிக்கப்பட்ட ஸ்கேன் செய்யப்பட்ட நகல்) ஆகியவற்றை investor@cameoindia.com–க்கு மின்னஞ்சல் மூலம் அனுப்பலாம்.
3. மாற்றாக, பாயிண்ட் எண். 1 அல்லது 2 ல் குறிப்பிடப்பட்டுள்ள விவரங்களை வழங்கி பயனர் ஐடி மற்றும் பாஸ்வேர்டை பெறுவதற்கு உறுப்பினர்கள் e–voting@nsdl.co.inக்கு மின்னஞ்சல் கோரிக்கையை அனுப்பலாம்.

தொலைதூர மின்னணு வாக்களிப்பு வசதி மற்றும் VC அல்லது OAVM மூலம் 48வது வருடாந்திர பொதுக்கூட்டம் நடத்துவதற்கான தளத்தை வழங்குவதற்கும், 48வது வருடாந்திர பொதுக்கூட்டம் நடக்கும் நேரத்தில் வாக்களிப்பதற்கும் கம்பெனி என்எஸ்டிஎல் சேவையைப் பெற்றுள்ளது.

மின்னணு வாக்களிப்பு செயல்முறை மற்றும் முறைக்கு (தொலைதூர மின்னணு வாக்குப்பதிவு மற்றும் வருடாந்திர பொதுக்கூட்ட நேரத்தில் வாக்களித்தல்) மற்றும் VC அல்லது OAVM மூலம் 48 வது வருடாந்திர பொதுக்கூட்டத்தில் கலந்து கொள்ளவும், உறுப்பினர்கள் வருடாந்திர பொதுக்கூட்ட அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள வழிமுறைகளைப் பின்பற்றலாம் அல்லது என்எஸ்டிஎல் வலைத்தளம் https;//e–voting.nsdl.comஐ பார்வையிடலாம் மற்றும் கேள்விகள் இருந்தால் e–voting@nsdl.co.in க்கு மின்னஞ்சல் செய்யலாம். உறுப்பினர்கள் கம்பெனியை corporate@sambandam.comல் தொடர்பு கொள்ளலாம்.

குழுவின் ஆணைப்படி
சம்பந்தம் ஸ்பின்னிங் மில்ஸ் லிமிடெட்டுக்காக
(ஒப்பம்) எஸ். நடராஜன்
கம்பெனி செயலாளர்

இடம்: சேலம்
தேதி: 01.09.2022